4. அரசினர் தீர்மானம் விதி 200(3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இப்போது ஒரு தீர்மானம் மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 200 உள்விதி (3)ன் கீழ், மானியக் கோரிக்கைகளின் வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப் பெற்ற நாட்களில் கடைசி நாள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள 29—7—1980 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக நிலுவையில் இருக்கும் பொருள்கள் அனைத்தையும் முடிவுறச் செய்ய பேரவைத் தலைவர் உடனடியாக வாக்கெடுப்பிற்கு விடவேண்டும் என்பதைத் தளர்த்தி ''29—7—1980 மாலை 7.00 மணிக்கு உடனடியாக வாக்கெடுப்புக்கு விட வேண்டும்'' என்னும் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

5. கவன ஈர்ப்பு.

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலைப் பகுதியில் மர்ம நோய் காரணமாகப் பலர் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பி. முகமது இஸ்மாயில், பொ. விஜயராகவன், மி. வின்செண்ட், கே. எம். தங்கமணி, டி. மணி, நா. சுந்தரராஜ், இரெ. இராசமாணிக்கம், டாக்டர் கே. சமரசம், ஜே. ஹேமச்சந்திரன், துரைமுருகன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள் திரு. பி. முகமது இஸ்மாயில்.

*திரு. பி. முகமது இஸ்மாயில்: பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் தக்கலைப் பகுதியில் பரவி வரும் மர்மநோய் காரணமாக அங்கு பலர் மரணமடைந்தது பற்றிய'', அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை வட்டத்தில், பாக்கோடு, மூலைச்சல் கிராமங்களில் 11-6-1980 முதல் 3-7-80